GCG1-6-TA

# சீஷர்களை உருவாக்கிடுங்கள்: கிறிஸ்தவர்களுக்கான இயேசுவின் அழைப்பு- நிகழ்ச்சி 6

**அறிவிப்பாளர்:** எது மிகவும் முக்கியமானது என்று நினைக்கிறீர்கள்?

அமெரிக்காவிலும், கானடா, மத்திய அமெரிகா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு பகுதி, ஆப்ரிகா, ஆசியா, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியாவிலும் உள்ள ஒவ்வொரு கிறிஸ்தவரும் செய்யவேண்டிய பிரதானமான காரியமாக இயேசு எதிர்ப்பார்க்கிறது என்ன?

அதற்கு இயேசு, "புறப்பட்டு போய் சீஷர்களாக்குங்கள் என்றார்." சீஷன் என்றால் என்ன? எப்படி சீஷர்களை உருவாக்க முடியும்?

இதை பற்றி சொல்ல விருப்பவர் எனது இன்றைய விருந்தினரான ராபி கேலட்டி, இவர் 3200 அங்கத்தினர்களை கொண்ட சபைக்கு மேய்ப்பராக இருக்கிறார் நான்கு காலை ஆராதனைகள் அங்கு நாடாகும், அதோடு தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏழு முதல் எட்டு நபர்களை சீஷர்களாக ஏற்ப்படுத்துகிறார். அவர்களும் மற்றவர்கள் சீஷர்களாக்க புறப்பட்டு செல்கின்றனர்.

இதுவரைக்கும் நீங்கள் யாரையும் சீஷர்களாக ஏற்ப்படுத்தாதிருந்தால், இதை உங்களால் நிச்சயம் செய்ய முடியுமா? நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை செயல்முறை காரியங்கள் என்ன?

அதைதான் இன்றைக்கு தி ஜான் அன்கேர்பெர்க் சிறப்பு நிகழ்ச்சியில் அறிந்துகொள்ள இருக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு நாம் இயேசு அளித்த பிரதான கட்டளைக்கு கீழ்படியாமல் இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட இருக்கும் அழிவிக்கேதுவான தாக்கத்தை பற்றி பார்க்க இருக்கிறோம். இன்றைக்கு எனது விருந்தினர் நமது தேசத்தின் பிரசித்திபெற்ற வேதாகம போதகர், ராபி கேலட்டி. சரி, ராபி, நேயர்களுக்கு சுருக்கமாக இதுவரை பார்த்ததை சொல்லுங்கள். முதலாவதாக பிரதான கட்டளை, என்றால் என்ன? ஒவ்வொரு கிறிஸ்தவரும் என்ன செய்யவேண்டும் என்று இயேசு கூறுகிறார்? அது ஏன் அதிக முக்கியமானது? அதற்கு பிறகு அவருடைய கட்டளைக்கு கீழ்படியாமல் இருந்தால் உண்டாகும் ஆபத்தான தாக்கத்தை பற்றி பேச இருக்க்ரிஒம். முதல்ல சொல்லுங்க, இது என்ன?

**ராபி கேலட்டி:** சரி, இயேசு சொல்லுகிறார், “புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்.” சீஷன் என்பான் மற்றொருவனுக்கு கற்றுகொடுப்பவனாக இருக்கிறான் என்று பார்த்தோம் வேதத்தை வாசிப்பதற்கு, வசனங்களை மனப்பாடம் செய்வதற்கு, ஜெபிப்பதற்கும், இன்னொருவருடன் விசுவாசத்தை பகிர்ந்துகொள்வதற்கும், விசுவாசத்தன் உபதேசத்தை புரிந்துகொள்ள உதவிடுவான், அவர்கள் பரிசுத்தாவியின் சத்துவத்தால் நிரப்பப்பட, பிறகு அவர்கள் மற்றவர்களுடைய வாழ்வில் பெரிய தாக்கத்தை ஏற்ப்படுத்த தயாராவார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இது ரொம்பவும் முக்கியமானதென்று நினைக்கிறேன். சரி, நீங்க ஒரு நல்ல உதாரணத்தை வைத்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன் அதிலிருந்து ஆரம்பியுங்கள், இயேசுவின் கட்டளையை பின்பற்றாவிட்டால் உண்டாகும் அழிவுக்கேதுவான தாக்கம். அதை பற்றி சொல்லுங்கள்.

**ராபி கேலட்டி:** எட்மன்ட் பிட்ஸ்ஜெரால்ட் ஒரு மிகபெரிய சரக்கு கப்பல். அது ஆயிரம் அடி நீளமானது. இந்த சரக்கு கப்பல் கிராண்ட் ராபிட்ஸ் ஏரிகள் வழியாக சென்றுகொண்டிருந்தது. அது வந்துகொண்டிருந்தபோது,  அது உலோகதாது

பொருட்களை இடமாற்றம் செய்யும்படியாக எடுத்துகொண்டு போகிறது. அப்ப கேனடாவிலிருந்து ஒரு பெரிய புயல் இந்த நதிகளில் உண்டாகத்துவங்கியது, பெரிய பெரிய அலைகள் கடல்மட்டத்திலிருந்து 25-30அடி உயரம். இதற்கு பின்னால இன்னொரு சரக்கு கப்பலும் இருந்தது, இந்த ஒரு விஷயத்தாலதான் இந்த கதையை சொல்ல விரும்புகிறேன். இந்த எட்வர்ட் பிட்ஸ்ஜெரால்ட் தங்கள் இடத்திற்கு அளித்த அறிக்கையில் நாங்கள் நன்றாக இருக்கிறோம் பிரச்சனை இல்லை என்றது. ஆனா இவங்களுக்கு பின்னால இருந்த சரக்கு கப்பல் இவர்கள் தண்ணீரோடு போராடிக்கொண்டிருப்பதை கவனிக்கிறது. அந்த கப்பலை அலைகள் மோதி அடிக்கிறது. அது தண்ணீரில் மெதுவாக செல்ல ஆரம்பிக்கிறது. இருந்தாலும் பிட்ஸ்ஜெரால்ட் நலமாக இருப்பதாக தைகள் அனுப்புகிறது. அப்ப திடீரென்று, ஒழு அலை கப்பலை கவிழ்த்து போட்டது. அது மூழ்குவதற்கு முன்பு, கொடுத்த கடைசி தைகள்: "நாங்க நன்றாக இருக்கிறோம். நல்லபடியாக இருக்கிறோம் என்பதாகும்." வெறும் பத்தே வினாடிகளில், அந்த பிட்ஸ்ஜெரால்ட் தண்ணீரில் மூழ்கியது அதிலிருந்த 27 பேரும் மரித்துபோனார்கள். பின்னால் இருந்த கப்பலின் கேப்டன் சொன்னார் ஒரு நிமிடத்திற்கு முன்பு பிட்ஸ்ஜெரால்ட் ரேடார்ல இருந்தது, அடுத்த நிமிடம் அது அங்கு இல்லை, ஒரு நிமிடத்திற்கு முன்பு பார்த்தோம், ஆனா அடுத்த நிமிடம் மறைந்துவிட்டது என்றார்.

இன்றைக்கும் உலக மக்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்காவிட்டால் அவர்களுக்கும் இந்த நிலைதான் ஏற்படும். பிரதான கட்டளையின் பங்கு மிகப்பெரியதாக இருக்கிறது, ஜான், அதனால் தான் அதை பற்றி இன்றைக்கு பேசுவது அவசியமாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. உமையிலேயே, இங்க மனுக்குலத்தின் வேதாகக நிலையை பார்க்கிறோம். மனுக்குலம் மற்றும் இரட்சிப்பை பற்றி நாம் தெரிந்திருக்கவேண்டிய மூன்று காரியங்களை வேதம் கூறுகிறதை பார்க்கிறோம். வேதம் கூறுகிற அந்த மூன்று குறிப்புகள் என்னென்ன?

**ராபி கேலட்டி:** சரி. நாம் மனிதனுடைய நிலையை பற்றி அறிந்துகொள்ள இருக்கிறோம்; கிறிஸ்துவின் கட்டளையை பற்றியும் பார்க்க இருக்கிறோம்; இதற்கிடையில், இரட்சிப்பின் சங்கலியை பற்றியும் பார்க்க இருக்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். மனிதனுடைய நிலையிலிருந்து ஆரம்பியுங்கள்.

**ராபி கேலட்டி:** மனிதனுடைய நிலை சற்று சுவாரஸ்யமாக இருக்கிறது. அது எதிர்மறையாக தோன்றலாம், ஆனால் அது நேர்மையானது, இன்றைக்கு மனுக்குலம் எந்த நிலையில் இருக்கிறதென்று சொல்ல விரும்புகிறேன். முதலாவதாக, இந்த உலகில் இருக்கும் அனைவர்க்கும் தேவனை பற்றிய அறிவு இருக்கிறது. இதை நாம் வேதத்தில் இருந்து பெற்றுகொள்கிறோம். ரோமர் 1:18ல், இப்படியாக சொல்லப்பட்டிருக்கிறது: “சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய் தேவ கோபம் வானத்திலிருந்து வெளிபடுத்தப்பட்டிருக்கிறது.” பவுல் சொல்கிறார், “ஏனெனில் தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும் ஆதலால் அவர்கள் போக்கு சொல்ல இடமில்லை.” இது ஏன் என்றும் பவுல் கூறுகிறார். ஒவ்வொருவருக்கும் தேவனை பற்றிய அறிவு இருக்கிறது. அவர்கள் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, தேவனை ஏன் அவரால் அறிந்துகொள்ள வில்லை என்பதற்கு எந்த சாக்குபோக்கும் சொல்ல வழியில்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. அதை மறுபடியுமாக சொல்ல விரும்புகிறேன். நா ஆப்ரிக்காவில் இருந்திருக்கிறேன். எத்தியோப்பியாவில் இருந்திருக்கேன். அங்குள்ள வழிகாட்டி சொல்வாங்க, நாகரீகம் என்ற ஒன்றின் வாசனையே இல்லாத உலகின் பத்து இடங்களின் ஒன்றில்தான் இருக்கிறீர்கள் என்பார்கள், சரியா? அந்த இடம்

அப்படிப்பட்டதாக இருக்கிறது. நா ஒரு மக்கள் இனத்தோடு பேசும்படியாக இருந்தேன், ஆச்சரியமாயிருந்தது, சரி, அதாவது, தேவனை பற்றி என்ன சொல்லி ஆரம்பிக்கலாம்? அந்த வசனத்தை தெரிந்துகொண்டேன், நான் சொன்னேன், “சிருஷ்டிப்புகளில் இருந்து, ஒரு தேவன் இருக்கிறார் என்று உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? ஜனங்கள் தங்கள் தலைகளை அசைத்தார்கள், அதிலிருந்து இந்த ஜனங்களுக்கு நாகரீகத்தை பற்றிய எந்த கருத்தும் இல்லை என்பதை புரிந்துகொண்டேன், சிருஷ்டிப்பை பார்த்து அவைகளின் மூலம், இவைகளை உண்டாக்கிய ஒருவர் உண்டென்று நினைக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவர் இருக்கிறார். தேவன் இருக்கிறார் என்ற எண்ணம் அவர்கள் இருதயத்திலும் எது சரி எது தவறு என்று நிதானிக்கும்படியான உணர்வும் அவர்களிடம் இருப்பதை புரிந்துகொண்டேன்.

**ராபி கேலட்டி:** ஆமா. சரி, எல்லாருக்கும் தேவனை தெரியும். இரண்டாவதாக, இந்த உலகில் ஒருவரும் நீதிமான் கிடையாது. என்னுடைய வார்த்தையாக எடுத்து கொள்ளவேண்டான், பவுலின் வார்த்தையாக எடுத்துகொள்ளுங்கள். ரோமர் 3:10: “அந்தப்படியே நீதிமான் ஒருவனும் இல்லை, உணர்வுள்ளவன் இல்லை தேவனை தேடுகிறவன் இல்லை.” இப்ப நடக்கிறது என்னவென்றால், உலகத்தில் ஒருவரும் நீதிமான்கள் கிடையாது. ஆனால் தொடர்ந்து என்ன சொல்கிறார் நல்லவர்கள் ஒருவரும் இல்லையாம். “நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை. ஒருவர்கூட இல்லை.” இதை நாம் புரிந்துகொண்டோம். ஆனா இதை ரோமர் 3:23 வரை பவுல் நீட்டித்து சொல்லுகிறார். “எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி.” இந்த வார்த்தை “எல்லாரும்”எல்லாரையும் குறிக்கிறது. இந்த உலகில் எல்லாரும் பாவம் செய்தோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, நா பொதுவா, ஜனங்களிடத்தில் பேசும்போது, ஒரு வசனத்தை மேற்கோள் காட்டி சொல்வதுண்டு, வேதம் சொல்கிறது என்னவென்றால், “எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம்.” எல்லாரும் என்பதில் நீங்களும் நானும் இருக்கிறோமா?

**ராபி கேலட்டி:** ஆமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இதற்கான பதில் ஆமாம் நிச்சயமாக இருக்கிறோம். நாம எல்லாருமே பாவிகள்தான். இதை புரிந்துகொள்வது மக்களுக்கு கடினமாக இருக்கிறது. அவங்க சொல்றாங்க, சரி, எல்லாருமே பாவம் செய்திருக்கிறார்கள், நாங்களும் அப்படிதான். இல்ல, நாம எல்லாரும் பாவிகள் அதனால நாம பிரச்சனையில் இருக்கிறோம்.

**ராபி கேலட்டி:** சரி. இது ஆதாமினுடைய பாவத்திலிருந்து வருகிறது. பவுல் தொடர்ந்து இந்த சிந்தனையை நமக்கு நினைப்பூட்டுகிறார் ரோமர் 5:12. பவுல் சொல்வதை கவனியுங்கள்: "ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று." தோட்டத்தில் ஆதாம் பாவம் செய்தபடியால் வந்தது, தேவன் ஆதாமிடம் சொன்னார், "தோட்டத்தில் உள்ள சகல விருட்சங்களின் கனியையும் சாப்பிடலாம் ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க கூடாது." உங்களுக்கு அந்த சம்பவம் தெரியும்: ஆதாமும் ஏவாளும் அந்த மரத்திற்கு போய், ஏவாள் கனியை பறித்து, அதை ஆதாமுக்கு கொடுத்தால். ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே, மனுக்குலம் முழுவதும் பாவம் பரவினது. நாம் ஆதாமிலிருந்து உண்டானபடியினால், அந்த "பாவ வைரஸ்" நம்மையும் பாதித்தது.

ஒரு உதாரணத்தை சொல்லுகிறேன். ஒரு அம்மா கர்ப்பமாக இருக்காங்க அவங்களுக்கு AIDS வியாதி இருக்குன்னு வைத்துகொள்வோம், அந்த குழந்தை அதே வைரஸினால் பாதிக்கப்பட்ட நிலையில் தான் பிறக்கும். இதில் அந்த குழந்தைக்கு வேற எந்த வழியும் கிடையாது. இப்ப, அந்த குழந்தைக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கு. அந்த பிள்ளை தனக்கு இருக்கும் தான் பாதிக்கப்பட்ட வைரசினால் பைத்தியமாகலாம். இல்ல அதை பற்றிய விளக்கைத்தை கொடுத்திடலாம். அதை அவள் மறுத்திடலாம், அல்லது அவன் தனக்கு aids இல்லையென்று மறுக்கலாம். ஆனா ஒரு விஷயம், அந்த குழந்தை aidsசினால்

பாதிக்கப்பட்டிருப்பது உண்மை. நாமும் aids ஐ விட மோசமான ஒன்றினால் பாதிக்கப்பட்டிருக்கிறோம். உண்மையில், aids நம்முடைய சரீர மரணத்தோடு முடிவடைந்துவிடும். பாவம் நித்திய நித்தியமாக இருக்கும். ஆதாமை போல, அவன் பாவத்திலிருந்து சரீரப்பிரகாரம் மரிக்கவில்லை, பாவத்தினால் ஆவியில் மரிக்க நேர்ந்தது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இங்க பாவத்தின் ஆதிநிலையை பார்க்கிறோம், ராபி, அதாவது என்னனா, ஆதாம் ஏவாள் அவங்களாலதான், இந்த பாவம் நம்மை தொடர்ந்து வந்திருக்கிறது அதனாலதான், நாம பாவத்தோடு பிறந்தோம். நாம அதை தொடர்ந்துகொண்டே இருந்தோம். பாவம் செய்யும்படி நாம தீர்மானித்தோம், ஆல்ரைட். நாம பாவிகள். இதை, நீங்க பார்த்திருக்கீங்க. உங்க இரண்டு வயது மகனிடமிருந்து இதற்கான உதாரணத்தை அறிந்திருக்கிறீர்கள். அதை பற்றி சொல்லுங்கள்.

**ராபி கேலட்டி:** ஆமா. என் மகன், ரிக், இரண்டு வயது, இந்த பயங்கரமான இரண்டு வயது ஒன்றுமில்லாத நிலை என்பார்கள். ஒரு குழந்தைக்கு பாவம் செய்ய சொல்லிதர தேவையில்லை. அதாவது, எப்படி பாவம் செய்யணுன்னு ஏ பையனுக்கு நான் சொல்லிதர தேவையில்லை, அவனுக்குள் பாவ சுபாவம் இருக்கிறது. அவனுடைய புதிய வார்த்தை என்னதெரியுமா, ஜான், இப்ப, சொல்றது, “இல்லை”. அவன்கிட்ட எப்ப கேட்டாலும் சரி, “ரிக், டின்னருக்கு சிக்கன் சாப்பிடுகிறா என்றா” இல்லை. “ரிக், கிட்சன் டேபிள் மேல இருந்து இறங்கு, “மாட்டேன்” “ரிக், சேர்ல இருந்து இறங்கு, “மாட்டேன்.” “ரிக், உங்க அம்மாவ நேசிக்கிறியா? “இல்ல.” நா, அவன்கிட்ட அப்பாவ நேசிக்கிரியான்னு கேட்க்க மாட்டேன் –அ து முட்டாள் தனமாக இருக்கும். ஆனா என்ன சொல்றேன்னா, அவனுடைய பதில் எப்போதும் ஒன்றுதான், “இல்லை” ஒரு குழந்தையை கீழ்படியாமல் இருக்க சொல்லிதரவேண்டாம். சரி, தாவீதுக்கு இது தெரியும். சங்கீதம் 51:5 ல் சொல்லுகிறார்,”இதோ நான் துர்க்குணத்தில் உருவானே. என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.” அவர் தாம் இந்த உலகிற்கு வரும்போது பாவத்தின் ஆதிநிலையோடு தான் பிறந்தார் என்பதை அவர் புரிந்துகொண்டார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்ப, உங்க மகனை தவிர, நாம என்ன செய்யணுன்னா செய்தித்தாள்களை பார்க்கணும் இல்ல தொலைக்காட்சி செய்திகளை கேட்கனும், இரவு செய்திகளை பார்க்கணும், அதில் தேவனுடைய கட்டளைகளை தகர்த்திடும் நபர்களால் இந்த சமுதாயம் நிறைந்திருப்பதை பார்க்க முடியும். அது நம்ம சமுதாயத்தை பாதிக்கிறது. நம்மை அது பாதிக்கிறது. இதுல இன்னும் வேதனையான விஷயம் நம்முடைய மீருதல்களுக்கு அபராதம் செலுத்தவேண்டும் என்று வேதம் சொல்கிறது, சரியா.

**ராபி கேலட்டி:** சரி. பவுல் இதை பற்றி ரோமரில் கூறியிருக்கிறார் அவர் மறுபடியும் இதே விஷயங்களை எபேசியர் 2லும் சொல்லியிருக்கிறார். இந்த பகுதியை உங்களுக்காக வாசிக்க விரும்புகிறேன், ஜான். வசனம் ஒன்றில் பவுல் சொல்வதை கவனியுங்கள்: “அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் நீங்கள் மரித்துபோயிருந்தீர்கள்.” தொடர்ந்து அவர் இவ்வுலக வழக்கத்தின் படியும் ஆகாய பிரபுவின் ஆதிக்கத்திலும் இருந்தோம் என்பதை எடுத்து சொல்லுகிறார். ஆனா அவர் சொல்கிற ஒரு அருமையான விஷயம் இருக்கிறது வசனம் 3: அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளை செய்தோம், - இங்க இருக்கு – சுபாவத்தினாலே கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.”

சரி பாஸ்டர், கோபாக்கினையை பற்றி எதுக்கு பேசறீங்க? இந்தஉலகத்தில் இருக்கும் கோபாக்கினை களோடு தேவனை இணைத்து சொல்லவில்ல.” தேவன் அன்பானவர் என்று நினைக்கிறோம், தேவன் இரக்கமுடையவர் தேவன் நீடிய சாந்தமுடையவர். இந்த தன்மைகளுக்காக தேவனை துதிக்கிறோம். ஆனால் வேதத்தில் தேவ கோபாக்கினையை பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அநேகர் இதை பற்றி பேசுவது கிடையாது. நாம இந்த கோபாக்கினையை பற்றி பேசாமல் இருப்பதற்கான காரணங்களில் ஒன்று, பாவிகள் அதனால் கோபாக்கினையை பற்றி கேட்க்க விரும்புவதில்லை, ஏன்னா நம்முடைய பாவத்தை பெரிதாக நாம் நினைப்பதில்லை. பழைய ஏற்பாட்டில், தேவனுடைய கோபாக்கினையை உணர்த்தும் 20 வார்த்தைகள் இருக்கிறது. சுமார் 600 பகுதிகள், தேவ

கோபாக்கினையை பற்றி சொல்கிறது, நம்முடைய பாவ சுபாவத்திற்கான விளைவு என்ன என்பதை சொல்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ராபி, தேவனுடைய கோபாக்கினை என்பதை ஜனங்கள் புரிந்துகொள்ளவில்லை. ஆனா இதை பற்றி யோசித்து பாருங்கள். இந்த உலகில் நன்மை தீமை என்பதன் தரத்தை நிர்ணயிப்பவர் தேவனாக இருந்தால், ஒரு தவறு நடக்கும்போது, அவருடைய தரத்தை அவர் மாற்றிகொள்வதில்லை, அவர் தம்மை மாற்றிகொள்வதில்லை. அவர் பாவத்தை எதிர்க்கிறார். அவருடைய தரத்திற்கு எதிரானதாக இருக்கிறது. அவர் தமது நிலையை எதற்காகவும் விட்டுகொடுப்பதில்லை. உண்மை இதுதான், அவர் அந்த தரத்தின் நிலையை கொண்டு என்ன செய்கிறார் என்று பார்க்க வேண்டும், நம்முடைய பாவங்கள் இன்னொருவர் மீது சுமரும்படியான வழியை ஏற்ப்படுத்தியிருக்கிறார்.

இதை பற்றிதான் இடைவேளைக்கு பிறகு நாம் பேசப்போகிறோம். நற்செய்தி என்னவென்றால் நாம எப்படியிருந்தாலும் பாவிகலாயிருந்தாலும் தேவன் நம்மை நேசிக்கிறார், சத்துருவானாலும், எதிர்த்தாலும் சரி. ஜனங்கள் என செய்திருந்தாலும் சரி, ஆமாம் ஒருவேளை ஒருவர், யாரையாவது கர்ப்பளித்திருந்தாலும், கொலை, அல்லது மதுபான அசிமையானாலும், அலல்து விவாக ரத்து செய்திருந்தாலும், அவர்களை பாதிக்கும்படியான என்ன விஷயங்கள் அவர்கள் வாழ்க்கையில் நடந்திருந்தாலும் சரி, அழிவுக்கேதுவான வாழ்கையாயிருந்தாலும் – தேவன் அவர்களை நேசிப்பதாக சொல்கிறார். அதை தமது குமாரனை அனுப்பி நிருபித்திருக்கிறார், அதை பற்றி அடுத்தட பகுதியில் பார்க்க இருக்கிறோம். இரட்சிப்பிற்கான வழியை உண்டாக்கி வைத்திருக்கிறார், நம்முடைய தண்டனைகள் இயேசுவின் மீது சுமத்தப்பட தேவனுடனான நமது உறவு மறுபடியும் புதிப்பிக்கப்படும். இதுதான் அந்த நற்செய்தி பிரதான கட்டளை என்பதை இதை அறிந்த கிறிஸ்தவர்கள் மற்றவர்களுக்கு இதை எடுத்து சொல்வதாகும். நாம் திரும்பி வந்ததும் இதை பற்றி மேலும் பலவற்றை பார்க்க இருக்கிறோம். தொடர்ந்து இணைத்திருங்கள்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் ராபி கேலட்டியுடன் பேசிக்கொண்டிருக்கிறோம், பிரதான கட்டளையை பற்றிதான் பார்த்துகொண்டிருக்கிறோம். இன்றைக்கு உலகில் எழுநூறு கோடி மக்கள் இருக்கிர்ந்றனர், அதில் நானூற்றி ஐம்பது கோடி மக்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த ஜனங்களை சந்திக்கும்படியான வழியை இயேசு கூறியிருக்கிறார். அதைதான் பிரதான கட்டளை என்கிறோம். அதை பற்றிதான் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கு பிரதான கட்டளையை பின்பற்றாமல் இருந்தால் உண்டாகும் அழிவை பற்றிதான் பார்த்துகொண்டிருக்கிறோம், பிரதான கட்டளைக்கு கீழ்ப்படியாமல் இருத்தல். ஒன்றை அறிந்துகொண்டோம், மனுக்குலத்தின் நிலையை பற்றி நாம் பார்த்துகொண்டிருந்தோம். மனுக்குலத்தின் நிலையானது எப்படி சுவிசேஷத்தின் நற்செய்தியுடன் பொருந்துகிறதென்று சுருக்கமாக சொல்லுங்கள், யோவான் 3:16 ன்படி.

**ராபி கேலட்டி:** இந்த பிரதான கட்டளை வேதத்தின் பிரதான வசனத்தை சுமந்து செல்கிறது, யோவான் 3:16. “தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை – தத்துவமான – ஒரே குமாரனாகிய, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை  விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் முழு உலகத்தில்  அன்புகூர்ந்தார்.” கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு உள்ள உறவை காத்திட மனந்திரும்புதலும் விசுவாசமும் எவ்வளவு அவசியம் என்று பார்த்தோம். இப்ப அப்போஸ்தலனாகிய பவுலுக்கு எப்படி இந்த பிரதான கட்டளையை எடுத்து செல்வது என்று கேள்வி உண்டாகும் என்பது தெரிந்திருக்கிறது. அதனால் தான் சொல்கிறார், நான் உங்களுக்கு இரட்சிப்பின் சங்கலியை கொடுக்கிறேன் என்று.

அதை ரோமர் 10:13-17; பார்க்கலாம், இந்த சங்கலியை நீங்கள் புரிந்துகொள்ளும்படி இதை வாசிக்கிறேன். அந்த சங்கிலி தொடர்பை நீங்கள் கவனியுங்கள். வசனம் 13 ஐ பாருங்கள்: “கர்த்தருடைய நாமத்தை வேண்டிக்கொள்ளுகிற யாவரும் இரட்சிக்கப்படுவார்கள். ஆனால் அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரை வேண்டிக்கொள்ள முடியும்? அவரை குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி அவரை விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் அவரை பற்றி எப்படி கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? எழுதியிருக்கிறபடி, சமாதானத்தை கூறு நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்.” இதுதான் இரட்சிப்பின் தகர்க்கமுடியாத சங்கிலி. இந்த சங்கிலியில் ஒன்று தளர்வாக இருகிறது, ஆனா நா இந்த காரியங்களில் உங்களுக்கு உதவிடுவேன்.

முதலாவதாக: வாக்குத்தத்தம் இதுதான், “கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுகிற யாவரும் இரட்சிக்கப்படுவார்கள்.” சாதாரணமாக கேட்கும் செய்திகளைவிட இது வித்தியாசமானது, ஜான். இது உபதேசத்தை புரிந்துகொள்வதற்கு சற்று மேலான ஒன்று. இங்க கூப்பிட வேண்டிய ஒரு செயல் நடைபெறவேண்டும், இதில் இரண்டு பகுதிகள் இருக்கிறது. ஒன்று, இயேசு தான் பரலோகம் செல்ல ஒரே வழி என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அப்போஸ்தலர் 4:12, “அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.” யோவான் 14:6, இயேசு சொல்கிறார், “நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.” இயேசுதான் ஒரே வழி என்பதை புரிந்துகொள்ளவேண்டும். இரண்டாவதாக, கரத்தை நோக்கி கூப்பிட வேண்டும். பவுல் ஒருசில வசனங்களுக்கு முன்பாக இதை சொல்கிறார், வசனம் 9: “கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தொடிளிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.” தொடர்ந்து அவர் உங்கள்

விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுவீர்கள் என்கிறார். கூப்ப்பிடுதலின் தன்மையை புரிந்துகொள்ளவேண்டும்.

இரண்டாவதாக ஒரு விஷயம்: அதை நம்ப வேண்டும். நீங்கள் கூப்பிடும் முன்பு, நீங்கள் விசுவாசிக்க வேண்டும். அதாவது உங்கள் விசுவாசம் கிறிஸ்துவின் மீது இருக்கனும். ஒரு சில நிகழ்சிகளுக்கு முன்பு இதை பற்றி சொல்லியிருக்கிறோம். நீங்கள் விசுவாசிக்கனுன்னா, நீங்க அதை கேட்கனும். ஒரு சொல்கிற ஒரு விஷயம் உங்கள் செவிகளில் விழவேண்டும். இதுதான் வாக்குத்தத்தம், நீங்க கேட்டு,விசுவாசிக்கிறீர்கள், விசுவாசிக்கும்போது, கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்வீர்கள்.

இதை இன்னும் உறுதிபடுத்தலாம். நீங்க கேட்கணுன்னா, யாராவதை உங்களுக்கு சொல்லணும். இதை நன்றாக கேளுங்கள். ஜனங்கள் ஒருவேளை, இப்படி கேட்கலாம், “நா பாஸ்டர் கிடையாது, நா பிரசங்கியார் கிடையாது, என்னால பண்ண முடியாது.” இங்க பிரசங்கியார்களை பற்றி அவர் சொல்லல. விசுவாச மக்கள் இந்த செய்தியை உலகிற்கு எடுத்து சென்று, தேவனுடைய நற்செய்தியை பிரகடணிப்பதை சொல்கிறார். இங்க ஒரு சுவாரஸ்யமான விஷயம் இருக்கிறது. பவுல் சொல்கிறார் ஒரு இரட்சிகபடவேண்டுமேன்றால் – கேமரா மூலம் இரட்சிப்பு வராது, லைட்ஸ், அப்பறம் பவர் பைன்ட், இல்ல இசை, நாடகம், ஒளிபரப்பு நிலை, படங்கள், தொலைக்காட்சி, இதெல்லாம் பிரயோஜனமில்லை. ஒரு நபர் கர்த்தருடைய நாமத்தை நோக்கி கூப்பிடும்போது இரட்சிப்பு உண்டாகும், அதற்கு சுவிசேஷத்தை ஒருவர் பிரசங்கிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் அதிகாரப்பூர்வமான வார்த்தையை பற்றி பார்த்தோம் – மனந்திரும்பி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தல்.

இன்னொரு விஷயத்தையும் சேர்த்துகொள்ளலாம். அனுப்பப்படும்போது தான் ஜனங்கள் பிரசங்கிக்க முடியும். சரி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பற்றிய சுவிசேஷத்தோடு உலகிற்குள் செல்ல வேண்டும் என்பது ஒரு கட்டளை, அப்படி சுவிசேஷத்தோடு போகும்போது, நாம் தேவனால் அனுப்பப்படுகிறோம். இப்ப கேள்வி என்னன்னா எப்படி ஒரு அனுப்பப்பட முடியும்? சரி, இயேசு சொல்கிறார், “அறுவடை மிகுதியாயிருக்கிறது

ஆட்களோ கொஞ்சமாக இருக்கிறார்கள். அறுவடைக்கு எஜமான் ஆட்களை அனுப்பும்படி வேண்டிகொள்ளுங்கள்.” ஒரு குறிப்பு சொல்கிறேன் – ஊழியத்திற்கும் அருட்பணிக்கும் வரும்படி நாம் யாரையும் வற்புறுத்தி அழைப்பதில்லை. அழைப்பை கொடுப்பது தேவன் தான்.

இந்த சங்கிலியை பாருங்கள்: ஜனங்கள் அனுப்பப்படுகிறார்கள், அனுப்பப்படுகிறவர்கள், எல்லா இடங்களிலும் பிரசங்கம் செய்கிறார்கள், அவர் பிரசங்கிக்கையில், ஜனங்கள் கேட்க்கிறார்கள். அவர்கள் கேட்கும்போது, விசுவாசிக்கிறார்கள், அவர்கள் விசுவாசிக்கிறதால், வேண்டிகொள்கிறார்கள்; வாக்குத்தத்தம் இதுதான், கர்த்தருடைய நாமத்தை வேண்டிக்கொள்ளுகிற யாவரும் இரட்சிக்கப்படுவார்கள்.

இந்த சங்கிலியில் எந்த பகுதி எளிதில் தளரக்கூடியது? இந்த சங்களியின் பெலவீனமான பகுதி எது? இதற்கான பதில், நமக்குள் இருக்க்ரியது. இரட்சிப்பின் சங்கிலியில் நமது பங்குதான் பெலவீனமான பகுதியாகும். நாம பகிர்ந்துகொள்ளாமல் இருப்பதுதான் பெலவீன பகுதி. நாம போகாமல் இருப்பதுதான் பெலவீனமாகிறது. நம்முடைய வாழ்வில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கட்டளைகளை கீழ்படியாமல் இருந்தால் அது பெலவீன பகுதியாகும்.

அது ஒரு குழாயை போன்றது. அந்த குழாய் தொடர்ந்து போகிறது, இயேசு அப்போஸ்தலர்களிடம் இதை பகிர்ந்துகொண்டார், அப்போஸ்தலர்கள் தொடர்ந்து தங்களை பின்பற்றுகிறவர்களுக்கு சொன்னார்கள், இன்றைக்கு வரைக்கும் சங்கிலி நன்றாக இருக்கிறது, அந்த குழாய் தொடர்கிறது. இப்ப கேள்வி இதுதான், நாம் பெற்றுக்கொண்ட செய்தியை வைத்து நாம் என்ன செய்யப்போகிறோம்? அதை நாமும் தொடர்ந்த மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள போகிறோமா இல்லையா?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, அதாவது, இயேசு ஒரு குழாய் வழியாக வரும் ஊற்று நீராக இருக்கிறார் என்று வைத்துகொள்வோம், அது அப்போஸ்தலர்கள் மூலமாக வந்து கிறிஸ்தவர்களுக்கு வந்து, எப்படியோ என்னை வந்து சேர்கிறது, அப்பறம் உங்களிடம்

வருகிறது. சரி. பிறகு இதை கேட்டுகொண்டிருக்கும் விசுவாசிகளான மக்களுக்குள் கடந்து செல்கிறது, சரியா. கேள்வி என்னன்னா, அது நம்மோடு நின்று விடுமா? மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதால் இந்த தண்ணீர் தொடர்ந்து பாய்ந்து செல்லுமா, அல்லது இங்கேயே நின்று விடுமா? இதுதான் பெலவீனமான நிலையாகும்.

**ராபி கேலட்டி:** ஜனங்கள் என்னிடம் கேட்கும் கேள்வி, ஜான், ஆப்ரிக்காவில்

சுவிசேஷத்தை பற்றி கேள்விப்படாத அப்பாவியான மனிதனின் வாழ்க்கை என்னவாகும்? அவன் பரலோகம் போவானா? அதற்கான பதில், ஆமா, அவன் பரலோகம் போகலாம்." ஆனா பிரச்சனை என்னன்ன, அந்த மாதிரி ஒரு மனுஷன் இல்லையே. ஆப்ரிக்காவில் ஒன்றும் தெரியாதவர்கள் யாருமில்லை. ஆப்ரிக்காவில் குற்றம் செய்யாத நபர் யாருமில்லை. அதாவது, "நல்ல மனிதர்கள்" பரலோகம் செல்ல முடியாது. மன்னிக்கப்பட்டவர்கள் பரலோகம் செல்வார்கள். சரி, நீங்க உங்கள் வாழ்க்கையில் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுகொள்ளாததினால் நரகம் போவீர்கள் என்று கிடையாது. ஒரு இரட்சகரின் அவசியம் இருக்கிற ஒரு பாவியாக இருப்பதால் நீங்கள் நரகம் செல்வீர்கள்.

நான் சில மலைக்க வைக்கும் புள்ளி விபரங்களை பார்த்தேன், இன்றைக்கு நாம் இருக்கும் நிலையையும் நமக்கு இருக்கும் சந்தர்ப்பங்களையும் வெளிப்படுத்தியது, ஜாதிகளை சந்திக்க வேண்டியதில் இருக்கும் சவால்களையும் எடுத்துரைத்தது. அதை உங்களுக்காக வாசிக்கிறேன். தென் மண்டல பாப்டிஸ்ட் மாநாட்டின் இண்டர்நேஷனல் மிஷன் போர்ட் நடத்திய சமீபத்திய ஆய்வில், இந்த உலகத்தில் எழுநூறு கோடி மக்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. மூன்றில் ஒருபங்கினர் தங்களை கிறிஸ்தவர்கள் என்கிறார்கள். மூன்றில் இரு பங்கினர் தங்களை அவ்விசுவாசிகள் என்கின்றனர். ஒரு பங்கினர் தாங்கள் இதுவரை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை கேள்வி பட்டதே இல்லை என்கின்றனர்.

முதல் குழுவினரில், மேற்கத்திய நாடுகள் உள்ளடங்கும், அவர்கள் உலக சம்பத்துகள் பட்டியலில் 62 சதவிகிதம் பங்குவகிக்கிரார்கள். 97% சொத்துகள் தங்களுக்காக

செலவிடப்படுகிறது.மீதமுள்ளது 3% அது உலக தொண்டு நிறுவனங்களுக்கு பிரித்து அளிக்கப்படுகிறது1% பொதுநல சேவைகளுக்கு, இதர கிறிஸ்தவ சேவைகளுக்கு வழங்கப்படுகிறது. இந்த மீதமுள்ள 2% கிறிஸ்தவர்களின் சேவைகளுக்காக பகிர்ந்தளிக்கப்படுகிறது:

கிறிஸ்தவ சேவைகளின் ஒதுக்கீட்டில் 99.9% அவர்களுடைய சொந்த நாடுகளில் அவர்களுக்காக செலவிடப்படுகிறது.மீதமுள்ள .01% கிறிஸ்தவ பணிகளுக்கு செலவிடப்படுகிறது. .௦09% ஏற்க்கனவே சுவிசேஷத்தை கேள்விப்பட்டும் இரட்சிக்கப்படாமல் இருப்பவர்க்ளுகாக செலவிடப்படுகிறது. வெறும்- இங்க பாருங்க - .௦01% மட்டுமே இதுவரை இயேசுவின் நாமத்தை கேள்விப்படாத நூறு முப்பது கோடி மக்களுக்காக செலவிடப்படுகிறது.

கிரேக் பிலாம்பெர்க் இப்படியாக சொல்கிறார்: “1990 களில் பெரும்பாலான அமெரிக்கர்கள் தங்கள் பணத்தை வெளிநாட்டு ஊழியங்களை விட இரண்டு மடங்கு அதிகமாக பூ வளர்ச்சிக்கு செலவிட்டனர்.”அருட்பணி ஊழியங்களை விட இரண்டுமடங்கு அதிகம் பெண்கள் உள்ளாடைகளுக்கு செலவிட்டனர்.ஒன்றரை மடங்கு அதிகமாய் வீடியோ கேம்ஸ் மற்றும் பின்பால் விளையாட்டு கருவிகளுக்கும் செலவிடப்பட்டது இப்ப யாரு பின்பால் விளையாடறாங்க?. ஐந்து மடங்கு செல்ல பிராணிகளுக்கும், ஒன்றை மடங்கிற்கு மேலாக சிவிங்க மிட்டாய்க்கும் செலவிடப்பட்டது. நீச்சல் குளம் மற்றும் உபகரனங்களுக்காக மூன்று மடங்கு அதிகமாய் செலவிடப்பட்டது. 27மடங்கு அதிகமாய் மிட்டாய்களுக்கும் 17 மடங்கு அதிகமாய் உணவு பொருட்கள் மற்றும் இடை குறைவிற்கான உணவுகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. 20 மடங்கு அதிகமாய் விளையாட்டு நிகழ்சிகள் மற்று விளையாட்டுகளிலும், 20 மடங்கு அதிகம் குளிபானத்திற்கும் செலவிடப்பட்டுள்ளது. 140 மடங்கு சட்டப்பூர்வமான சூதாட்டம் போன்ற நிகழ்வுகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஜான், இந்த புள்ளி விபரங்களில் இருந்து ஒன்று புரியுது: பிரதான கட்டளையை பற்றி எங்களுக்கு எந்த அக்கறையும் இல்லை என்பதைத்தான் வெளிப்படுத்துகிறோம்.

நம்முடைய பொக்கிஷம் அழிந்துபோகிற ஆத்துமாக்கள் அல்ல. இயேசு சொன்னதை மறுபடியும் நினைப்பூட்ட விரும்புகிறேன், “உங்கள் பொக்கிஷம் எங்கேயோ, அங்கே உங்கள் இருதயம் இருக்கும்.” நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேணும், ஒவ்வொரு நாளும், கேட்கவேண்டிய கேள்வி: ஜாதிகளை சீஷராக்க நான் தனிப்பட்ட முறையில் என்ன செய்துகொண்டிருக்கிறேன்?

இந்த படம் ஞாபகம் இருக்கா, ஸ்கிண்ட்ளர்ஸ் லிஸ்ட். ஒரு தொழிலதிபருக்கு மிகப்பெரிய தொழிற்சாலை இருக்கும். இரண்டாம் உலகபோரின் மத்தியில், அவருடைய தொழிற்சாலையில் வேலை செய்ய யூதர்களை விலைக்கு வாங்குவார். அவருக்கு தெரியாமலேயே அவர் அவர்களை சித்தரவதை செய்யும் முகாம்களின் எரிநெருப்பிற்கு அவர்களை தப்புவித்தார். அவருடைய தொழிற்சாலையில் இந்த மக்கள் எல்லாரும் வேலை செய்துகொண்டிருந்தார்கள், ஆயிரம் ஆயிரமான ஜனங்களை விலைக்கு வாங்கியிருந்தார். அந்த ஜனங்களை தனது சொத்தை விற்று வாங்கினார். அந்த படத்தின் இறுதியில், அந்த கதையின் முடிவு எப்படி இருக்குமென்றால் ஒருவர் இவரிடம் வந்து சொல்வார், “யுத்தம் முடிந்துவிட்டது; இவர்களை நீங்கள் போக விடவேண்டும்.”அந்த சமயத்தில், அவர் 1,100 பேரை பாதுகாத்து வைத்தார். ஒருவர் மட்டும் அவரிடம் வந்து சொன்னாராம், “நீ நல்ல வேலை செய்திருக்கிறாய், Mr.  ஸ்கிண்ட்ளர்ஸ். நீ 1.100 பேரை பாதிகாத்திருக்கிறார்.” அந்த வார்த்தையின் வல்லமை அவரை தாக்கியது. இன்னும் அதிகம் செய்திருக்கலாம். அவர் வைத்திருந்த காரை பார்த்து அவர் சொன்னாராம், “இந்த காரையும் விற்று நான் இன்னும் அதிகம் பேரை வாங்கியிருக்கலாம். அதோடு, “என்னிடம் இருந்த பேனாவை விற்று இன்னும் சிலரை விலைகொடுத்து வாங்கியிருக்கலாம் என்றார். என்னிடம் இருந்த தங்கத்தை விற்று நான் இன்னும் சிலரை வாங்கியிருக்கலாம் என்றா.” அவருடைய கண்ணோட்டம் மாறினது. அவரிடம் சொந்தமாக இருந்தது என்றல்ல, அவருக்கு எது சொந்தம் என்று பார்க்கவில்லை. இன்னும் அதிகம் செய்திருக்கலாமே என்று நினைத்தார்.

நான் நம்புகிறேன் நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கும்போது, இன்னும் அதிகம் செய்திருக்கலாமே என்று நினைப்போம். பாருங்க, இயேசு கிறிஸ்துவை

ஏற்றுகொள்ளாவிட்டால் அவர்கள் கிறிஸ்து இல்லாத நித்தியத்தை அடைவார்கள் என்று ஜனங்களுக்கு நிருபிக்க வேண்டும் என்பது கிடையாது. அது இலக்கு அல்ல. நம்முடைய இலக்கு என்னவென்று கேட்டுக்கொள்ள வேண்டிய நேரத்தில் இருக்கிறோம், இதை பற்றி நாம் என்ன முடிவு எடுக்கப்போகிறோம்?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, நேயர்களே, நீங்கள் இதை புரிந்துகொள்ள வேண்டும் அந்த தண்ணீர் இயேசுவிடமிருந்து அப்போஸ்தலர்களுக்கு வந்தது, கிறிஸ்தவர்கள் மூலமாக சபை வரலாற்றில் தொடர்ந்து வந்து, உங்களிடம் எப்படியோ வந்து சேர்ந்துவிட்டது. அது உங்களோடே நின்று விடுமா, அல்லது நீங்க தேவனுக்கு கீழ்படிந்து அந்த தண்ணீர் தொடர்ந்து உங்கள் மூலம் நண்பர்களுக்கு, தெரிந்தவர்களுக்கு, தேவன் காண்பிக்கும் நபர்களுக்குள் பாய்ந்து செல்லும்படி செய்வீர்களா?

அதுதான் இந்த செய்திதொடரின் இலக்காக இருக்கிறது. இந்த நிகழ்ச்சியை கேட்டிருப்பீர்கள் என நம்புகிறேன், இதை தொடர்ந்து தியானியுங்கள், தேவன் இதை பயன்படுத்திடுவார் இதை உங்கள் அருகிலுள்ள நண்பர்களிடம் பகிர்ந்துகொள்ள முயலுங்கள், உங்களோடு வேலை பார்ப்பவர்கள், பள்ளி நண்பர்கள், உங்களுக்கு தெரிந்தவர்களோடு பகிர்ந்திடுங்கள். ஒருவரிடமிருந்து துவங்குங்கள். புள்ளிவிபரம் சொல்கிறது ஒரு கிறிஸ்தவர் ஒருவரை சந்தித்தால் – ஒவ்வொரு ஆறுமாதம் அவர்களை போல ஒருவரை உருவாக்குவார்கலாம், பதினெட்டு அறை ஆண்டுகளில் முழு உலகத்தையும் இயேசு கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்திடலாம் என்கிறது. இயேசுவின் திட்டத்தை கிறிஸ்தவர்கள் ஜாக்கிரதையாய் எடுத்துகொள்ள வேண்டும், பிரதான கட்டளை. நீங்கள் இதை செய்வீர்கள் என நம்புகிறேன்.

ராபி, எங்களோடு இருந்த இந்த தகவல்களை எங்களோடு பகிர்ந்துகொண்டதற்கு உங்களுக்கு நன்றி. உங்களை நாங்கள் பாராட்டுகிறோம்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கொர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.